
மின்னிதழ்

# தேசியம்

THESIYAM

www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTENING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 125 | வள்ளுவர் ஆண்டு 2054 | சனிக்கிழமை 06.01.2024 | பக்கங்கள் 12



பக்கம் 3

## 13வது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களை அபிவிருத்திக்காக பயன்படுத்த வேண்டும்!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு!

## பொன்னாவெளி சுண்ணக்கல் விவகாரம்!

### பேராசிரியர்கள் மௌனம் காக்கக் கூடாது!

### சபா.குகதாஸ் கோரிக்கை!



பக்கம் 6

## மயிலத்தமடு விவகாரம்! தமிழர் தரப்பிற்கு விரோதம் காட்டும் பிள்ளையான்!



பக்கம் 4



பக்கம் 8

## தமிழரசின் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்!

### சத்தியலிங்கம் உறுதி!



பக்கம் 10

## யுத்த வலிகளை தாங்கிய மக்கள் இன்று வரிகளையும் தாங்கி வாழும் நிலை!

### சிறிநேசன் ஆதங்கம்!

# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

## ரணிலின் யாழ் விஜயம்?

2025க்கு முன்னர் மீள்குடியேற்றத்தை முழுமையாக நிறைவுசெய்யுமாறு அறிவுறுத்தல் விடுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணாமல் போனோரை தேடும் பணிகள் துரிதப்படுத்தப்படும், வடக்கின் காணி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றெல்லாம் உத்தரவாதங்களை வடக்கில் அடுக்கியிருக்கிறார். வீழ்ச்சியடைந்திருக்கும் முழு நாட்டையும் கட்டியெழுப்ப ஒன்றுபடுமாறு அழைப்பு விடுத்துள்ள அதே வேளை முதலீடுகளுக்காக புலம்பெயர்ந்தோருக்கும் அழைப்பு விடுத்திருக்கிறார்.

இங்கு தான் அவருடைய தந்திரம் வெளிப்படுகிறது. நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என நன்கு அறிந்திருக்கின்ற அவர் வருடத்தின் ஆரம்பத்திலேயே வடக்குக்கான தன்னுடைய விஜயத்தை திட்டமிட்டு மிகவும் கவனமாக காய்களை நகர்த்த ஆரம்பித்திருக்கிறார்.

ஜனாதிபதியாக ஆட்சிக்கு வந்தது முதல் அவர் இலக்கு வைப்பது முழுக்க முழுக்க புலம்பெயர் தமிழர்களையே அவர் இதனை கொழும்பிலிருந்து கொண்டும் சொல்கிறார். அதே கருத்துகளை எதற்காக கொஞ்சம் இணைப்புகளுடன் கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் சொல்கிறார் என்பதனை நாம் அவதானிக்க வேண்டும்.

யுத்தம் நடைபெற்ற காலங்களிலும், யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னரும் எனத் தொடர்ந்த பலருடைய, பல அமைப்புகளுடைய தடைகளை அவர் பதவிக்கு வந்தவுடன் நீக்குவதாக அறிவித்தார். எங்கே பாடை திறக்கும் எப்போது ஒரு சுலாவல் சுலாவலாம் என்றிருந்த பலர் நாட்டுக்குள் வந்து சென்றனர். வெறுமனே தாம் வந்து சென்றதாக இருக்கக்கூடாது என்பதற்காக ஏதோ தாமும் முக்கியமானவர்கள் என்று காண்பிக்க முயன்றார்கள்.

அதில் ஒரு பகுதியாக உலகத் தமிழர் பேரவையினரால் இமயமலைப் பிரகடனம் அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான தேவை இப்போது ஏன் ஏற்பட்டது என்பதுதான் இன்னமும் பலருக்கும் புரியாத புதிர். நேபாளம் தெரிவு செய்யப்பட்டதற்கான காரணம், அழைக்கப்பட்ட தரப்பினர், ஒழுங்குபடுத்தப்பட்ட பிரகடனம் என இதில் பல விடயங்களில் சந்தேகங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

ஆனால், நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கும், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கும் இமயமலைப் பிரகடனத்தின் மூலம் தீர்வு கிடைத்துவிட்டது என்பது போன்ற தோரணையில் சந்திப்புக்களும், பேச்சுக்களும் நாட்டில் நடந்து முடிந்துவிட்டது. அதன் பின்னரான விமர்சனங்கள் இன்னமும் ஓய்ந்தபாடில்லை. அப்படிப்பார்க்கையில் ஒருவகையில் ஜனாதிபதியின் முதல் முயற்சி தோல்வி என்றே சொல்ல வேண்டும்.

இவ்வாறான நிலையில்தான் ஜனாதிபதியின் அடுத்த முயற்சி முன்னெடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இந்த வடக்கு விஜயம். அவருடைய வடக்கு விஜயம் அறிவிக்கப்பட்டது முதலே வருகைக்கெதிராக அறிக்கைகள் பல வெளிவந்தன. போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. ஆனால், அவர் தன்னுடைய விஜயத்தினை எக்காரணம் கொண்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. இருந்தாலும் தடைகளும், கைதுகளும் நடைபெற்றிருக்கின்றன.

இது அவருடைய விடாப்பிடி முயற்சியைக் காட்டுவதாக இருந்தாலும், அவருடைய முற்சிகளின் தார்ப்பரியங்களையும் தந்திரங்களையும் தமிழ் மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டிய கட்டாயம் காணப்படுகிறது என்பதே முக்கியம்.

தேர்தலில் தோல்வியடைந்து தேசியப்பட்டியல் மூலமாக பாராளுமன்றம் நுழைந்து, அதிஸ்டவசமாக ஜனாதிபதியாகியிருந்தாலும் அவருடைய கட்சியையும் அரசியலையும் விட்டுவிடாதிருக்கும் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியை தூக்கி நிறுத்தவேண்டிய பொறுப்பு அவரிடமே இருக்கிறது. அதே போன்று நாட்டை பொருளாதாரச் சிக்கலிலிருந்து மீட்க வேண்டியதும் அவரே என்றாகிவிட்டது.

எவ்வாறானாலும், தமிழ் மக்களிடமிருக்கின்ற பொருளாதார நெருக்கடி தொடர்பிலான அரசு மீதான எதிர்ப்புணர்வு சிங்கள மக்களிடம் இல்லையென்றில்லை. இந்த நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து கொண்டிருக்கும் மாற்று தேவை என்கிற கோசம் அவருடைய அரசியலில் பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

அதே நேரத்தில் சர்வதேசத்தினைத் திருப்திப்படுத்துவதற்கும் எதிர்காலத் திட்டமிடலுக்கும் புலம்பெயர் தமிழர்களின் பங்கு முக்கியமாக இருக்கும் என்பதனை அனுமானித்ததன் வெளிப்பாடே அவருடைய திட்டம். இன்னும் பல இருந்தாலும் இத்திட்டம் பலிக்க புலம்பெயர் நம்மவர்கள் உதவ வேண்டும்!

# 13வது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களை அபிவிருத்திக்காக பயன்படுத்த வேண்டும்!



ஒவ்வொரு மாகாணமும் 13வது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களை அபிவிருத்திக்காக பயன்படுத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தொழில் வல்லுனர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவித்துள்ளது. மாகாண மட்டத்தில் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் மூலம் வழங்கப் பட்டுள்ள அதிகாரங்கள் போதுமானது என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். அவற்றில் மத்திய அரசாங்கம் தலையிடாது என்றும் அதேபோல் அதிகாரப் பகிர்வு என்பது ஒரு அரசியல் எண்ணக்கருவாக மாத்திரம் அன்றி, பொருளாதார அடிப்படையில் யதார்த்தமாக அமைய வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாண மட்டத்தில் சுயாதீன பொருளாதாரத்தை உருவாக்குவது தொடர்பிலான தெரிவை ஜப்பான், கொரியா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ் போன்ற நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதி பூநகரிக்கு விஜயம்! முக்கிய நிகழ்விலும் பங்கேற்பு!



நான்கு நாள் விஜயமாக வடமாகாணத்திற்கு வருகை தந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று (06) பிற்பகல் பூநகரி பிரதேசத்திற்கு விஜயம் செய்தார். இந்நிலையில், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட பூநகரி நகர அபிவிருத்தித் திட்டத்தை மீளாய்வு செய்வதற்காக பூநகரி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் ஜனாதிபதி கலந்து கொண்டார். அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பூநகரி கோட்டையை பார்வையிட்டதுடன், பூநகரி பிரதேசத்தில் இயங்கிவரும் உயர்தர முந்திரி உற்பத்தி நிறுவனமான “வன்னி கெசு“ முந்திரி உற்பத்தி நிறுவனத்திற்கு ஜனாதிபதி விஜயம் செய்து அதன் செயற்பாடுகளையும் அவதானித்திருந்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.





# ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டம் கிளிநொச்சியில் முன்னெடுப்பு!

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்கு விஜயம் செய்துள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த ஆர்ப்பாட்டமானது நேற்று (06-01-2024) கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சீமெந்து உற்பத்திக்கான சுண்ணக்கல் அகழ்வுக்கு அனுமதி வழங்கியதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகம் முன்பாக ஏற்பாடு செய்யப்பட்ட போராட்டத்திற்கு எதிராக பூநகரி பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதை அடுத்தே இந்த போராட்டமானது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் தமிழ் தேசிய முன்னணியினர் மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.





# சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் அரசியல் பிளவு தோன்றியது!



அரசியல் நிலவரங்களை ஆராயும் "த டிப்ளோமெட்" சஞ்சிகை சுட்டிக்காட்டு இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து ஏறக்குறைய 15 ஆண்டு கள் நிறைவடைந்துள்ள இந்த கால கட்டத்தில் சிங்கள வர்களுக்கும் தமி ழர்களுக்கும் இடையில் அரசியல் பிளவுகள் தோன்றியுள்ளன என்று த டிப்ளோமெட்" என்ற ஆசிய பசுபிக் அரசியல் நிலவரங்களை ஆராயும் சஞ்சிகை தெரிவித்துள்ளது. நீண்ட கால மாக இலங்கை அரசு செய்த போர்க் குற்றங்களுக் காக நீதி மற்றும் பொறுப்புக் கூறலைக் கோரி வரும் தமிழ் புலம்பெயர் குழுக்களி டையேயும் அரசியல் பிளவுகள் ஆழமா- கியுள்ளன என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதியுதவி செய்ததாகக் கூறி இலங்கை அரசால் தடுப்புப் பட்டியலில் வைக் கப்பட்டிருந்த, ஒரு காலத் தில் அதிகாரம் பெற்ற தமிழ்குடை அமைப்பான உலக தமிழர் பேரவை, பௌத்த தூதுக் குழுவுடன் இணைந்து வெளி யிட்ட "இமாலய பிரகடனம்" இந்த பிளவை அதிகரித்துள்ளது என்று "டிப்ளோமெட்" சுட்டிக்காட்டியுள்ளது. இது தமிழ் மக்கள் மத்தியிலும் பதற்றதை தோற்றுவித்துள்ளது. இலங்கை ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்கவிடம் இந்த பிரகடனம் முன்வைக்கப்பட்டது. கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பல நடவடிக்கைகளை பரிசீலிப்பார் என்று ஜனாதி பதி உறுதியளித்துள்ளார். பிரகடனம் எளிமையா னது மற்றும் ஆறு கருப்பொருள்களை பகுதிகளை உள்ளடக்கியது. இருப்பினும், பிரச்சினைகளின் மிகவும் சர்ச்சைக்கு உரிய முக்கிய பகுதிகள் அதில் சேர்க்கப்படாமை, குறித்த பிரகடனம், தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்ற உந்துதல் பெற்ற அரசியல் சூழ்ச்சி என்று பலரும் விமர்சனம் வெளியிட் டுள்ளது என்று "டிப்ளோமெட்" மேலும் இந்த நிலையில் ஆவணத்தில் குறிப் பிட்டுள்ளது.

# மயிலத்தமடு விவகாரம்! தமிழர் தரப்பிற்கு விரோதத்தை காட்டும் பிள்ளையான்!



மயிலத்தமடு பண்ணையாளர்கள் விடயத்தில் பிள்ளையான் தனது அரசியல் காழ்ப்புணர்ச்சியை காட்டியுள்ளது தெட்டத் தெளிவாக விளங்கியுள்ள தாக பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் தெரிவித் துள்ளனர்.

மயிலத்தமடுவில் காவல்துறையினர் காவலரண் அமைத்தால் கால்நடை பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடலாம் என மட்டக்க ளப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் இராஜா ங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் பிள்ளையான் தீர்மானம் ஒன்றை எடுத்து இருந்தார்.

இதற்கு பல எதிர்ப்புகள் வந்திருந்தபோதிலும் குறித்த தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த மாதம் மயிலத்தமடு பகுதியில் காவல்துறை காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு இருந்தது.

தற்போது அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஆதரவாக அங்குள்ள காவல்துறை காவலரன் செயற்படுவதாகவும் கால காலமாக மேய்ச்சல் தரையாக பயன்படுத்திய இடங்களில் கால்நடை களை மேய்க்கவிடாமல் தடுத்துள்ளனர்.

மயிலத்தமடு பண்ணையாளர்கள் விடயத்தில் பிள்ளையான் தனது அரசியல் காழ்ப்புணர்ச்சியை காட்டியுள்ளது தெட்டத் தெளிவாக விளங்கியுள்ள தாக பாதிக்கப்பட்ட பண்ணையாளர்கள் தெரிவித் துள்ளனர்.

மயிலத்தமடுவில் காவல்துறையினர் காவலரண் அமைத்தால் கால்நடை பண்ணையாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடலாம் என மட்டக்க ளப்பு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் இராஜா ங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் பிள்ளையான் தீர்மானம் ஒன்றை எடுத்து இருந் தார். இதற்கு பல எதிர்ப்புகள் வந்திருந்தபோதிலும் குறித்த தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த மாதம் மயிலத்தமடு பகுதியில் காவல்துறை காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு இருந்தது.

தற்போது அத்துமீறிய பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஆதரவாக அங்குள்ள காவல்துறை காவலரன் செயற்படுவதாகவும் கால காலமாக மேய்ச்சல் தரையாக பயன்படுத்திய இடங்களில் கால்நடை களை மேய்க்கவிடாமல் தடுத்துள்ளனர்.

கால்நடைகளுக்காக மேய்ச்சல் தரையாக பயன்படுத்தப்பட்ட நிலத்தில் அத்துமீறிய குடியேற்ற வாசிகள் விவசாயம் செய்ய ஆதரவு வழங்கும் விதத்தில் இந்த செயற்பாடு அமைந்துள்ளது.



# திருகோணமலையில் பண்பாட்டுப் படுகொலை! செந்தில் தொண்டமானின் முயற்சிக்கு கடும் எதிர்ப்பு!



திருகோணமலையில் முன்னெடுக்கப்படவுள்ள பொங்கல் விழாவானது ஒரு பண்பாட்டு படுகொலை யாகவே கருத வேண்டுமென திருகோணமலை முத்தமிழ் சங்க தலைவர் மாயன் சிறிஞானேஸ் வரன் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாணத்தில் ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி இடம்பெற வுள்ள பொங்கல் விழா தொடர்பில் ஐபிசி தமிழின் நெற்றிக்கண் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள் ளார்.இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஈழத்தமிழர்கள் 2009 ஆம் ஆண்டு இனப்படு கொலைக்கு உள்ளானார்கள். அந்த இனப்படு கொலையில் இன்னொரு வடிவமாகவே பண்பாட்டு படுகொலை விளங்குகிறது. அந்த பண்பாட்டு படுகொலையை எவ்வாறு நிகழ்த்துவது தொடர்பில் பேரினவாத இலங்கை அரசு பல்வேறு திட்டங் களை முன்னெடுத்து வருகிறது. அந்த அடிப்படையி லேயே தான் திருகோணமலையில் பொங்கல் விழா முன்னெடுக்கப்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

# பிரபல சுற்றுலாத்தலமாக மாறவுள்ள நீர்த்தேக்கம் : ரணில் முன்மொழிவு!



விக்டோரியா நீர்த்தேக்கத்தை இலங்கையில் உள்ள பிரபலமான சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ள தாக மத்திய மாகாண ஆளுநர் லலித் கமகே தெரிவித்தார். நேற்று முந்தினம் விக்டோரியா நீர்த்தேக்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை பார்வையிடுவதற்காக மத்திய மாகாண ஆளுநர் லலித் கமகே அப்பகுதிக்கு விஜயம் மேற்கொண்டி ருந்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக் கையில்,"உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் இடமாக இந்த இடத்தை மேலும் மேம்படுத்துவது உள்ளூர் மக்களுக்கு புதிய வருமான வழிகளைத் திறக்கும்." எனக் கூறினார். இலங்கையில் மிகப்பெரிய நீர்த்தேக் கங்களில் ஒன்றாக கருதப்படும் விக்டோரியா நீர்த்தேக்கமானது மகாவலி அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் கடந்த 1985 ஆம் ஆண்டு அதிபர் ஜே.ஆர். ஜெயவர்தனவால் கட்டப்பட்டது. இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான நட்பை வலுப்படுத்தும் நோக்கில் அந்தக்காலத்தில் இந்த நீர்த்தேக்கத்துக்கு விக்டோரியா மகாராணியின் பெயர் சூட்டப்பட்டது. சிலையொன்றும் நிறுவப்பட உள்ளது இதன் திறப்பு விழாவில் கூட ஐக்கிய இராச்சியத்தின் முன்னாள் பிரதமர் மார்கரெட் தச்சர் கலந்து கொண்டிருந்தார்.

அதிபர் ரணில் விக்ரமசிங்கவினால் இந்த நீர்த் தேக்கத்தை அபிவிருத்தி செய்யும் பணி முன்மொழி யப்பட்டு அபிவிருத்தி பணிகளும் இடம்பெற்று வருகி றது.அதன் பிரகாரம் விக்டோரியா மகாராணியின் சிலையொன்றும் இங்கு நிறுவப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பொன்னாவெளி சுண்ணக்கல் விவகாரத்தில் புவியியல் பேராசிரியர்கள் மௌனம் காக்கக் கூடாது!

## சபா.குகதாஸ் கோரிக்கை!





**பொன்னாவெளி சுண்ணக்கல் விவகாரத்தில் புவியியல் பேராசிரியர்கள் மௌனம் காக்கக் கூடாது என வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா.குகதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,**

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச பொன்னா வெளி பகுதியை மையமாக கொண்டு சுண்ணாம் புக்கல் அகழ்வதற்கும் சிமெந்து தொழிற்சாலை அமைப்பதற்கும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அகழ்வுப் பணி நடைபெற்றது. பின்னர் வனவளத் திணைக் களம் தலையிட்டு தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் மக்கள் ஐந்து மாதங்களை கடந்து போராடுகின் றனர். சுண்ணக்கல் அகழ்வு தொடர்பாக தடுப்பதற்கு அரசியல்வாதிகள் மக்களுடன் நின்று ஊடகங்க ளுக்கு அறிக்கை விடுவது மட்டும் தான் நடைபெறு கிறது. ஆனால் இதனை தடுப்பதற்கான விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் மற்றும் புவியியல் சார்பான விளக்கங்கள் உரிய நிபுணர்கள் அல்லது விரிவுரை யாளர்கள் போன்ற தரப்பால் இதுவரை அரசாங்கத் தை நோக்கியோ அல்லது பொதுவாகவோ முன் வைக்கப்படவில்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட புவியியல் சார்பு கல்விமான்கள் மௌனம் காப்பது நல்லதல்ல. புவியியல் ரீதியாக யாழ்ப்பாண பாறை அமைப்பு மயோசின் கால சுண்ணக்கல் வகைக்குரியதாகும்.

அத்துடன் இளமடிப்பு பாறை வகைக்கு உரியதாக வும் காணப்படுவதால் இப்பிரதேசத்தில் பாரிய அகழ்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டால் மிகப் பெரிய பாதிப்பு அப்பகுதியில் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. இதனை மையமாக கொண்டு புவியியல் பேராசிரியர்கள் இவை தொடர்பான கருத்துக்களை வெளியிட வேண்டும் காப்பிரேட் கம்பனிகளினால் உலகில் பல இடங்கள் பாலை வனங்களாகவும் மக்கள் வாழ முடியாத பிரதேசங்களாகவும் மாறி வருவதை போன்று எதிர் காலத்திலும் பொன்னா வெளி பிரதேசம் மாறிவிடும் என குறிப்பிடப்பட்டுள் ளது.

# இலங்கைக்கு நன்மை பயக்கும் வளங்கள் வடக்கில்!

## அதிபர் ரணிலின் அறிவிப்பு!





வடக்கு மாகாணத்தில் உள்ள வளங்களை பயன்படுத்தி முழு நாட்டையும் அபிவிருத்தி செய்ய முடியும் என அதிபர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணத்திற்கு மூன்று நாட்கள் விஜயத்தை மேற்கொண்ட ரணில் விக்ரமசிங்க, 4ம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பங்கேற்றார். இந்த கூட்டத்தில் பங்கேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் தெரிவித்ததாவது, மேல் மாகாணத்தை, குறிப்பாக கொழும்பை மாத்திரம் அடிப்படையாக கொண்டு இலங்கையின் தேசிய பொருளாதாரம் அமைந்திருக்க கூடாது. இலங்கையில் பல பாகங்கள் உள்ளன. இதன்படி, தென் மற்றும் மத்திய மாகாணங்களை உள்ளிட்ட அனைத்து மாகணங்களையும் மையப்படுத்தி தேசிய பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும்.ஏற்றுமதி மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் மேம்படுத்தப்பட வேண்டும். இதன்படி, வடக்கு மாகாணத்தை தனித்துவமான பொருளாதார மையமாக கட்டியெழுப்ப முடியும்.மேலும், வடக்கை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக உருவாக்க முடியும். வட மாகாணத்தின் அபிவிருத்திக்குத் தேவையான அனைத்து வளங்களும் இங்கு உள்ளன.வடக்கின் அபிவிருத்திக்கு மட்டுமன்றி முழு நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிக்க முடியும். இதற்கு போதுமான அதிகாரப்பகிர்வு ஏற்கனவே இடம்பெற்றுள்ளது.அந்த செயற்பாடுகளுக்கு 13 ஆவது திருத்தத்தின் மூலம் கிடைத்துள்ள அதிகாரங்களே போதுமானது என நினைக்கின்றோம்.கொழும்பில் இருந்து பணம் வரும் வரை காத்திருக்காமல் அனைவரும் ஒன்றிணைந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு ஆளுநருடன் இணைந்து அபிவிருத்தி திட்டங்களை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவு!








ஆளுநருடன் இணைந்து அடுத்த ஐந்து வருடங்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை சமர்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வவுனியாவில் தெரிவித்துள்ளார ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், ஜனாதிபதி செயலாளர், வட மாகாண பிரதம செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மூன்று மாவட்டங்களினதும் அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பலரும் கூட்டத்தில் கலந்துக்கொண்டனர். வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான எதிர்கால திட்டங்கள், மாவட்டங்களில் எதிர்நோக்கப்படும் சவால்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது அரசாங்க அதிபர்களும், மக்கள் பிரதிநிதிகளும் எடுத்துக் கூறினார்.கடந்த காலங்களை போலல்லாது இறுதியாக வெளியிடப்பட்ட சாதாரண, உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணம் முன்னிலை பெற்றுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் இதன்போது தெரிவித்தார். ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில் மாகாண சுகாதார துறையினர் அதிகபட்ச முயற்சியை பயன்படுத்தி செயற்படுவதாகவும் ஆளுநர் தெரிவித்தார். ஏனைய மாகாணங்களை போல வடக்கு மாகாணத்தையும் அபிவிருத்தியை நோக்கி கொண்டு செல்வதே தனது நோக்கு என ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார். அத்துடன் யாழ்ப்பாணத்தை கல்விக் கேந்திர நிலையமாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.மாகாண மட்டத்தில் இம்முறை நிதி ஒதுக்கீடுகள் முன்னேடுக்கப்பட்டுள்ளதால் அதனை முழுமையாக பயன்படுத்த வேண்டும். மாகாணத்தை அபிவிருத்தி அடையச் செய்வதற்காக ஆளுநருடன் இணைந்து செயற்றிட்டங்களை முன்மொழியுமாறும் தெரிவித்த ஜனாதிபதி அதே வேளை வடக்கு மாகாணத்தை மீள் புதுப்பிக்கத் தக்க சக்தி உற்பத்தி செய்யும் வலயமாக உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித் தார்.







# யாழில் ரணிலுக்கு எதிரான போராட்டத்தில் கைது செய்யப்பட்ட நால்வருக்கு பிணை!

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பேராட்டத்தில் கைது செய்யப்பட்ட நால்வர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.ஜனாதிபதியின் வருகையை எதிர்த்து யாழ்ப்பாண மாவட்ட செயலகத் திற்கு அருகில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வாக்குமூலம் பதிவு- யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்குள் அத்துமீறி நுழைய முற்பட்டமை தொடர்பிலேயே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டனர்.இந்நிலையில் பொலிஸார் அவர்களிடம் வாக்குமூலத்தைப் பெற்றுவிட்டு பிணையில் விடுவித்தனர்.





# தமிழரசுக்கட்சியின் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்! ப.சத்திய லிங்கம் தெரிவிப்பு



இலங்கை தமிழரசுக்கட்சியின் 17வது தேசியமா நாடு ஏற்கனவே திட்டமிட்ட தினங்களில் இடம் பெறும் என கட்சியின் பொதுச்செயலாளர் ப.சத்திய லிங்கம் தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, “இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் 2023 ஆம் ஆண்டு மே மாதம் 5ம் நாள் நடைபெற்றது. இதன் போது எடுக்கப்பட்டதீர்மானத்தின்படி தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27, 28ஆம் நாட்களில் என்,சி, வீதி உப்புவெளி, திருகோணமலை என்னும் முகவரி யில் அமைந்துள்ள “ஜேக்கப் வீச் றிசோட்” எனும் மண்டபத்தில் நடைபெறும்.மாவை.சோ.சேனா திராஜா தலைமை குறித்த மாநாடு கட்சியின் தலை வர் மாவை.சோ.சேனாதிராஜா தலைமையில் நடைபெறும். மேற்படி மாநாட்டுக் கூட்டம் மு.ப.10.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுமென் பதை கட்சி அமைப்பு விதியான 10(C) இற்கு அமைவாக இத்தால் தெரியப்படுத்துகின்றேன். ”என தெரிவிக்கப்பட்டுள்ளது.“இலங்கைத் தமிழர சுக் கட்சியின் மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும். தற்போது வரை அதில் எந்த மாற்றமும் இல்லை. ”என கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக் கது.

# உலகளாவிய ரீதியில் சிறந்த சுற்றுலா நாடுகளில் ஒன்றாக இலங்கை தெரிவு!

உலகளாவிய ரீதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு குறைந்த விலையில் விடுமுறையை கழிக்க கூடிய 13 நாடுகளில் ஒன்றாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது. FOX நியூஸ் தொகுத்துள்ள மலிவான விடுமுறை இடங்களின் பட்டியல், இயற்கை எழில் கொஞ்சும் இடங்களை அனுபவிப்பதற்கான சிறந்த இடமாக இலங்கையை விவரித்துள்ளது.யானைகள் போன்ற பூர்வீக வனவிலங்குகளுடன் நெருங்கி பழகவும், கடற்கரைக்கு சென்று சூரிய உதயத்தை பார்க்கும் வாய்ப்பும் கிடைக்கும் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தங்குமிடத்திற்கு 20 முதல் 40 டொலர் வரை செலவாகும் எனவும் சராசரியாக ஒரு நேர உணவுக்கு 5 டொலர் செலவாகும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா, மலேசியா, கிரீஸ் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுடன், இலங்கையும் மலிவான விடுமுறை இடமாக பெயரிடப்பட்டுள்ளது.



# மீண்டும் மூடப்படும் வடக்கு ரயில் பாதை! புனரமைப்பு பணிகள் நாளைய தினம் ஆரம்பம்!

மஹவ முதல் அனுராதபுரம் வரையான வடக்கு ரயில் பாதை முழுமையான புனரமைப்புக்காக எதிர்வரும்7 ஆம் திகதி முதல்  மூடவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.யாழ்ப்பாணப் பகுதிக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை நேற்று முந்தினம் மேற்கொண்டிருந்த பந்துல குணவர்தன யாழ் புகையிரத நிலையத்தில் விசேட கண்காணிப்பு நிகழ்விலும் கலந்துகொண்டார்.கடந்த வருடத்தில் ரயில்வே திணைக்களம் வடக்கு புகையிரத பாதைக்கு விசேட முன்னுரிமை அளித்து பாரிய முதலீட்டை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதன் கீழ் அனுராதபுரத்திலிருந்து ஓமந்த வரையிலான புகையிரத பாதையானது மணிக்கு நூறு கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் வகையில் நவீனப்படுத்தப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பூரண புனரமைப்புக்காக மஹவ முதல் அனுராதபுரம் வரையான வடக்கு ரயில் பாதை நாளை முதல் மூடப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். இதன்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் யாழ் நிலைய அதிபர் எச்.எம்.கே.டபிள்யூ.பண்டார உட்பட புகையிரத திணைக்கள அதிகாரிகள் குழுவும் கலந்துகொண்டனர்.







# வவுனியாவில் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்! இருவர் கைது!

வடக்கிற்கு 4 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை முன்னெடுத்துள்ள அதிபர் ரணில் விக்ரமசிங்க நேற்று (05) வவுனியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.இந்த நிலையில் வவுனியாவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன், மாநகரசபை கலாசார மண்டபத்தினை அண்மித்துள்ள நூலக வீதி , நகரசபை வீதி என்பன முடக்கப்பட்டுள்ளது. வவுனியா மாநகரசபை கலாசார மண்டபத்தில் நேற்று 10 மணிக்கு ஆரம்பமான வன்னி மாவட்டத்திற்கான அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் அதிபர் கலந்து கொண்டுள்ளார். இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சிலர் அதிபரைச் சந்திப்பதற்காக உள்நுழைய முற்பட்ட வேளை காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர்.இதேவேளை குறித்த பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கறுப்புத் துணியைக் காட்டியவாறு எதிர்ப்புக் கோசங்களை எழுப்பினர். இந்நிலையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட  வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இருவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்று முந்தினம்  யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது யாழ் மாவட்ட செயலகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நான்கு பேர் காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# யுத்த வலிகளை தாங்கி வாழ்கின்ற மக்கள் தற்போது வரிகளையும் தாங்கி வாழ வேண்டிய நிலை! சிறிநேசன் ஆதங்கம்!




**கிழக்கை மீட்க வந்தவர்கள் இப்போது கிழக்கு எந்த திசையில் இருக்கின்றது என்று தெரியாதபடி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறி நேசன் தெரிவித்தார்.**

மட்டக்களப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இன்றைய காலகட்டத்தில் பேசு பொருளாக இருக்கின்ற முக்கியமான விடயம் என்னவென்றால் இந்த வரியை பற்றி பேசுகின்றார்கள்.

அதைவிட மின்சார சபையை தனியார் மையப்படுத்துகின்ற விடயம் தொடர்பாகவும் பேசுகின்றார்கள். எந்த விடயமாக இருந்தாலும் இது ஒரு ஜனநாயக ஆட்சி நடைபெறுகின்ற மக்களாட்சி நடைபெறுகின்ற நாடு என்கின்ற வகையில் மக்களுக்கு சார்பாக அந்த தீர்மானங்கள் இருந்தால் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் இல்லை என்றால் எதிர் வரும் தேர்தல்களில் அவர்கள் தக்க பாடங்களை புகட்டுவார்கள் என்பதில் எதுவிதமான கருத்து வேறுபாடு இல்லை.

அந்த வகையில் பார்க்கின்ற போது வரி என்பது சொல்வார்கள் தை பிறந்தால் வழி பிறக்கும் என்று ஆனால் தை பிறந்ததும் பதினைந்து வீரமாக இருந்த வட் வரி 18 விதமாக அதிகரித்திருக்கின்றது. அத்தோடு இந்த வரியின் பொருட்களின் பட்டியலும் நீண்டு கொண்டு செல்கின்றது.

எனவே மக்கள் இந்த வருடத்தில் ஏதாவது அரசாங்கம் தங்களுக்கு ஒரு வருட ரீதியான பரிசு தரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற போது இப்போது அவர்கள் வரிகளை தந்திருக்கின்றார்கள். ஏற்கனவே இந்த மக்கள் யுத்தத்தால் வலிகளை தாங்கி வாழ்கின்றார்கள் தற்போது வரிகளையும் தாங்கி வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றார்கள்.

இந்த இடத்தில் மக்கள் குற்றம் செய்யவில்லை மக்கள் பொருளாதார குற்றம் இழைக்கவில்லை மக்கள் அப்பாவிகளாக வாழுகின்றார்கள் கேட்கின்ற வரிகளை கொடுத்து விட்டு அப்பாவிகளாக வாழ்கின்றார்கள் ஆனால் பொருளாதார குற்றம் இழைத்தவர்கள் யார் என்பதனை நீதிமன்றம் சுட்டிக் காட்டி இருக்கின்றது.

இந்த ராஜபக்ச குடும்பங்கள் பொருளாதார குற்றங்களை இழைத்திருக்கின்றார்கள் என்று சொல்லி எனவே நீதிமன்றத்தின் தீர்ப்பு அவ்வாறு இருக்கின்ற போது இந்த பொருளாதார குற்றம் இழைத்த அவர்களிடம் இருந்து நஷ்ட ஈடுகளை பெற்றுக் கொள்வதன் மூலமாக விவசாயத்தில் நட்டம் ஏற்பட்டு இருக்கின்றது அதேபோன்று பல்வேறு துறைகள் சார்ந்தும் நஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றது.

எனவே இந்த இடத்தில் இந்த நஷ்ட ஈடுகளை இந்த பொருளாதார குற்றம் இழைத்தவர்களிடம் இருந்து வரப்படுவதன் மூலமாக மக்களிடம் வரிகளை விதிக்காமல் பெருந்தொகை பணத்தை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கின்றது அது மாத்திரமல்ல இன்னும் ஒரு விடயத்தை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன் கோத்தபாய ஆட்சிக்கு வருகின்ற போது திறைசேரியில் ஏழு பில்லியன் அமெரிக்க டாலர் இருந்தது ஆனால் வெளிநாட்டு வைப்பகங்களில் எமது தலைவர்கள் இங்கு இருக்கின்ற பணம் படைத்தவர்கள் கிட்டத்தட்ட 56 பில்லியன் டாலர்களை சட்டவிரோதமாக சேர்த்து வைக்கின்றார்கள் என்கின்ற தகவல்களும் கிடைத்திருக்கின்றது.

அதன்படி பார்த்தால் 56 பில்லியன் டாலர் என்பது கிட்டத்தட்ட 5600 கோடி டாலர் அங்கு இருக்கின்றது இந்த 5600 கோடி டொலரும் எங்களுடைய வைப்பகங்களுக்கு வருமாக இருந்தால் நிச்சயமாக இந்த பொருளாதார இடைகளை கடக்க கூடியதாக இருக்கும் அதுமாத்திரமின்றி வரிகளால் மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய சுமைகளை தவிர்க்கக் கூடியதாகவும் இருக்கும்.

இன்னும் ஒரு பட்டியல் ஒன்று வெளியிடப்பட்டிருக்கின்றது இலங்கையின் பணக்கார வரிசை என்று ஒன்று கொடுத்திருக்கின்றது அந்த வரிசையிலும் கூட முதலாவது இடத்தில் இருக்கின்றவர்கள் இந்த பொருளாதார குற்றம் முளைத்தவர்களின் பெயர்களை இருக்கின்றது எனவே நீதிமன்றம் தீர்ப்பு சொல்கின்றது பொருளாதார குற்றம் இழைத்திருக்கின்றார்கள் என்று அதே ரீதியில் பொருளாதார ரீதியாக இலங்கையில் முதலாம் நபர்களாக இருக்கின்றவர்களும் இந்த பொருளாதார குற்றங்களைத் அவர்கள் என்பதனை சர்வதேச ரீதியாக ஒரு பட்டியல் படுத்தியிருக்கின்றார்கள் எனவே இலங்கையில் அவ்வாறு முதலாம் தரத்தில் இருக்கின்றவர்கள் பொருளாதார குற்றத்தை நிலைத்திருக்கின்றார்கள் என்றால் அவர்களிடம் இருந்து நிதியை அறவிடுவதன் மூலமாக மக்களுக்கு வரிச் சுமையை கொடுக்காமல் மக்கள் போர் குற்றம் இழைக்கவில்லை பொருளாதார குற்றமும் இழைக்கவில்லை ஆனால் இந்த அரசியல் தலைவர்கள் போர் குற்றம் இழைத்திருக்கின்றார்கள் பொருளாதார குற்றமும் நிலைத்திருக்கின்றார்கள். போர் குற்றம் என்பது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட குற்றமாக இருப்பதன் படியால் அதனை பெரும்பான்மை சமூகம் பேசாமல் இருக்கின்றது ஆனால் பொருளாதார குற்றம்

தொடர்ச்சி 11 பக்கம்

# யுத்த வலிகளை தாங்கி வாழ்கின்ற மக்கள் தற்போது வரிகளையும் தாங்கி வாழ வேண்டிய நிலை! சிறிநேசன் ஆதங்கம்!

என்பது எல்லா சமூகங்களையும் பாதித்திருக்கின்றது நீதிமன்றமும் விரல் நீட்டி காட்டி இருக்கின்றது இவர்கள்தான் பொருளாதார குற்றம் இழைத்தவர்கள் என்று அவர்களிடமிருந்து தண்டப் பணத்தை அளவிடுவதன் ஊடாக அல்லது இப்போது போதை வஸ்து காரர்கள் உடைய சொத்துக்களை பணத்தை அரசமயப்படுத்திக் கொண்டிருப்பது போன்று பொருளாதார குற்றம் இழைத்தவர்களுடைய சொத்துக்கள் பணங்கள் இங்கு வருமாக இருந்தால் நிச்சயமாக மக்களை நாங்கள் வரிகளில் மூலமாக வதைக்க வேண்டிய அவசியம் இல்லை.

இன்னுமொரு விடயம் பேசப்படுகின்றது மின்சார சபை கட்டணம் என்பதற்கு முன்பாக மின்சார சபையை தனியார் பயன்படுத்துகின்ற ஒரு விடயம் சென்று கொண்டிருக்கின்றது உண்மையில் இந்த விடயத்திலும் நாங்கள் ஆழமாக பார்க்க வேண்டும் எத்தனையோ அரசியல்வாதிகள் அரசியல் தலைவர்கள் இந்த மின்சாரத்தில் அவர்கள் கணக்கு விட்டிருக்கிறார்கள் மின்சார நிலுவை பணம் கட்டப்படாமலும் இருக்கின்றது.

கட்டப்படாமல் இருக்கின்ற மின்சார நிலுவை கட்டணங்களையும் அல்லது வீண்விரயமாக்கப்படுகின்ற அந்த மின்சாரம் அல்லது விம்பறையமாக கொடுக்கப்படுகின்ற போனஸ் கட்டணங்கள் எல்லாம் இருக்கின்றது இவற்றையெல்லாம் சரி செய்கின்றபோது நிச்சயமாக மின்சார சபையினை ஒரு லாபமிட்டும் துறையாக கொண்டு வரக்கூடியதாக இருக்கும் அவை அரசு மயப்படுத்தி இருந்தாலும் சரி தனியார் மயப்படுத்த இருக்கின்றார்கள் என்றாலும் சரி அது மக்களுக்கு பயனுடையதாக அமைய வேண்டும் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுகின்ற போது நீங்கள் எதைச் செய்தாலும் அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

நீங்கள் இதனை அறிவதாக இருந்தால் பாராளுமன்றத் தேர்தல் அல்லது ஜனாதிபதி தேர்தலை நடத்திப் பாருங்கள் அதில் நிச்சயமாக உங்களுக்கு மக்கள் தீர்ப்பு சொல்வார்கள் நீங்கள் அணுகுகின்ற அரசியல் பொறிமுறை அல்லது பொருளாதாரப் பொறிமுறை மக்கள் சார்பாக இல்லை அரசியல் வாதிகளுக்கும் பொருத்த முதலாளிகளுக்கும் சார்பாக தான் இருக்கின்றது என்கின்ற விடயத்தை சொல்வார்கள் மத்திய தர மக்கள் தொழிலாளர் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அது மாத்திரமில்லாமல் எமது ஆளும் கட்சி அமைச்சர்கள் ராஜாங்க அமைச்சர்கள் கூறுவார்கள் மீனுக்கு வாலை காட்டிவிட்டு பாம்புக்கு தலையை காட்டுவது என்று கூறுவார்கள் அதே போன்று பாராளுமன்றத்தில் சென்று வரி அளவிடுகின்ற அந்த சட்டத்திற்கு கையை உயர்த்துகின்றார்கள் இங்கு மக்கள் மத்தியில் வந்து வரியை மக்கள் மீது சுமத்தக்கூடாது அப்பாவி மக்கள் பாவம் என கூறுகின்றார்கள்.

இப்போது வீதிகள் அமைக்கின்ற விடயங்களாக இருக்கின்றோம் இந்த ஒப்பந்த வேலைகளில் இப்போது கிட்டத்தட்ட 15 விதமான தரகு பணம் வாங்கப்படுவதாகவும் பேசப்படுகிறது.

எனவே இவை எல்லாம் எடுத்துப் பார்க்கின்றபோது அரசாங்கம் இதைப் பற்றிச் சொன்னாலும் கூட இங்கு வீண்விரயங்கள் லஞ்சங்கள் ஊழல்கள் தரகுப்பணங்கள் என்பது பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றார்கள் எனவே இந்த விடயங்களை ஒழுங்குபடுத்தாமல் மக்கள் மீது நீங்கள் வரிகளை சுமத்துவது என்பது மிக மோசமான விடயம்.

மின்சார சபை ஊழியர்களும் தற்போது தெருவில் இறங்கி இருக்கின்றார்கள் தங்களுடைய லாபம் ஈட்டக்கூடிய துறையை ஏன் தனியார் மயப்படுத்த வேண்டும் என்று உண்மையில் அரசாங்கம் தங்கள் பக்கம் இருக்கும் தவறுகளை உன்னை திருத்தி உலகம் திருந்தும் என்று சொல்வார்கள் தங்கள் பக்கம் இருக்கின்ற தவறுகளை நிறைவேற்றிவிட்டு அதன் பின்னர் மற்றவர்களை திருத்த முன் வர வேண்டும்.

எனவே அரசு சார்பாக இருக்கின்ற ஊழல் மோசடிகள் மற்றும் பொருளாதார குற்றம் சம்பந்தமான விடயங்களை முறையாக தீர்த்து வைக்கின்றபோது மக்கள் மீது வரி பழுவை கொடுக்க வராது அதிலும் குறிப்பாக அப்பாவி மக்களை நீங்கள் குற்றம் செய்துவிட்டு அப்பாவி மக்களை வரிகள் மூலமாக தண்டிக்க வேண்டாம் என்று மிகவும் வினயமாக கேட்டுக் கொள்கின்றேன்.

மக்கள் எங்களிடம் பல புகார்களை செய்து கொண்டிருக்கின்றார்கள் அவர்கள் தெரியாத்தனமாக செய்த வேலைகளால் அவர்கள் தண்டிக்கப்பட்டு கொண்டிருக்கின்றார்கள் குறிப்பாக அன்று நான் பார்த்தேன் கல்வாஞ்சூடி பக்கம் வீதி அமைக்கின்ற போது அந்த வீதி முறையாக அமைக்கப்படவில்லை என்ற அடிப்படையில் அங்கு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்ற அல்லது சண்டை போடுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

உண்மையில் பார்க்கின்றபோது வீதிகள் அமைக்கப்படுவது நல்ல விடயம் வீதி அபிவிருத்தி மிக முக்கியமான விடயம் ஆனால் அந்த வீதி அபிவிருத்தி என்பது முதலில் அந்த விதிக்கு ஒதுக்கப்படுகின்ற நிதிகள் முழுவதும் அந்த வீதிக்குச் செல்ல வேண்டும் அடுத்த கட்டமாக பார்க்க போனால் அந்த வீதிகள் தரமாக போடப்பட வேண்டும்.

இப்போது என்ன நடக்கின்றது என்றால் இந்த தரகு பணம் பெறுவது என்பது கிட்டத்தட்ட சட்டரீதியான விடயம் போன்று மாறிவிட்டது ஐந்து விதமாக இருந்து பத்து வீதமாக இருந்து 15 வீதமாக இருந்து அந்த தரகு பணங்கள் கொடுக்கின்ற செயற்பாடுகள் மிகவும் லாபகரமாக மேற்கொள்ளப்பட்டு கொண்டு வருகின்றது எனவே இந்த விடயத்தில் அரசியல் வாதிகள் ராஜாங்க அமைச்சர்களாக இருக்கின்றவர்கள் உயர் அதிகாரிகளாக இருக்கின்றவர்கள் இந்த இடத்தில் மிகவும் பொறுப்பு சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஏனென்றால் அரசன் எவ்வழியோ குடியும் அவ்வழியே என்று கூறுவார்கள் மேலுக்கு உள்ளவர்கள் ஊழல் மோசடிகள் லஞ்சங்களை பெற்று வழிகாட்டுகின்ற போது அதன் கீழ் இருக்கின்ற அதிகாரிகளும் அவ்வாறு தூண்டப்படுகின்றார்கள் எனவே நான் சொல்லக்கூடிய விடயம் என்னவென்றால் மக்கள் மத்தியில் இருந்து கிடைக்கப்பெறும் புகார்களின் அடிப்படையில் இந்த வீதிகள் மிகவும் நேர்த்தியாக அமைக்கப்பட்டது போன்று இருக்கின்றது நான்

தொடர்ச்சி 12 பக்கம்

# யுத்த வலிகளை தாங்கி வாழ்கின்ற மக்கள் தற்போது வரிகளையும் தாங்கி வாழ வேண்டிய நிலை! சிறிநேசன் ஆதங்கம்!

சேத்துக்குடா பகுதியில் சென்றேன் அப்போதுதான் போடப்பட்ட விதிகளை பார்க்கின்ற போது அந்த வீதிகள் இந்த மழைக்கு கரைந்து விட்டது.

நேற்று வீதி அமைக்கின்றார்கள் இன்னும் ஒரு நான்கு நாட்களில் பார்க்கின்ற போது வீதிகள் கரைந்து செல்கின்றது எனவே இந்த வீதிகள் என்பது நான் நினைக்கின்றேன் அடுத்த தேர்தலுக்கு கூட நின்று பிடிக்க முடியாத நிலைக்கு இந்த வீதிகள் அமைக்கப்படுகின்றது இன்னும் சில இடங்களில் முக்கியத்துவம் இல்லாத வீதிகள்.

உண்மையில் பார்க்கின்ற போது எத்தனையோ மக்கள் குடி வாழுகின்ற வீதிகள் போடப்படாத நிலையில் உள்ளபோது தனிப்பட்டவர்கள் சிலர் தங்களுடைய ஆதரவாளர்கள் என்று சொல்லப்படுகின்ற இருக்கின்ற பகுதிகளில் மட்டும் வீதிகளை அமைக்கப்படுகிறது ஏன் என்று கேட்டால் அந்த குறித்த கட்சியை சேர்ந்தவர்கள் அந்த விதிகளை அவர்கள் அமைக்கின்றார்கள்.

எனவே முக்கியத்துவம் இல்லாத இடங்களில் வீதிகள் அமைக்கப்படுகின்ற ஒரு செயல்பாடும் தங்களை சார்ந்தவர்களுக்கு விதிகளை அமைத்துக் கொடுக்கின்ற செயல்பாடும் தங்களை சார்ந்தவர்களுக்கு ஒப்பந்த வேலைகளை கொடுக்கின்ற செயற்பாடுகளும் இப்போது மிகவும் அதிகரித்துக் கொண்டு செல்கின்ற நிலையை காணக்கூடியதாக இருக்கின்றது.

அபிவிருத்தி என்பது ஊழல் மோசடி லஞ்சம் இல்லாமல் தரமான அபிவிருத்தியாக இருக்க வேண்டும் மற்றைய அபிவிருத்திகள் எல்லாம் மக்களை ஏமாற்றி பிழைக்கின்ற செயற்பாடாக தான் இருக்கின்றது வாய் சொல்லில் வீரனடி என்கின்ற அடிப்படையில் இவர்கள் செய்கின்றது பாரபட்சமான பக்க சார்பான செயல்பாடாக இருக்கின்றது.

இன்னும் ஒரு விடயம் சுட்டிக்காட்ட வேண்டும் காணிகள் தொடர்பாக இந்த காணிகள் மாவடியோடை, புலுட்டுமானோடை, வெள்ளக்கல் மலை இவ்வாறான இடங்களில் எல்லாம் வகை தொகைகள் இல்லாமல் காடுகள் அழிக்கப்படுகின்றது ஆனால் அதை கேட்பாரும் இல்லை பார்ப்பாரும் இல்லை. அடுத்ததாக கூறப்போனால் மயிலத்த மடு மாதவனை பிரச்சனை இப்போது 100 நாட்களுக்கு மேலாக அவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் கிழக்கை மீட்க வந்தவர்கள் இப்போது கிழக்கு எந்த திசையில் இருக்கின்றது என்று தெரியாதபடி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மயிலத்தமடு மாதவனை என்பது அந்தப் பக்கமாக சிங்கள பெரும்பான்மை மக்கள் ஆயிரக் கணக்கில் ஏக்கர்களை அபகரித்துக் கொண்டு வருகின்றார்கள் உள்பக்கமாக இருந்து இவர்களும் காடுகளை வெட்டிக் கொண்டு செல்கின்றார்கள் மொத்தத்தில் பார்க்கின்ற போது இவர்களுக்கு நூற்றுக்கணக்கான ஏக்கர்களை சன்மானம் கொடுத்து விட்டு அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கர்களை பிடித்துக் கொண்டு வருகின்ற போது இதுதான் கிழக்கு மீட்பு என்றால் நீங்களும் காணியை பிடியுங்கள் நாங்களும் காணியை பிடிக்கின்றோம் நீங்கள் பிடிக்கின்ற காணிக்கை நாங்கள் எதுவும் கேட்க மாட்டோம் நாங்கள் பிடிக்கின்ற காணிகளுக்கு நீங்கள் எதுவும் பேசாமல் இருங்கள் இதுதான் கிழக்கு மாகாண மீட்பு ஒப்பந்தம் என்று நான் நினைக்கின்றேன்.

இப்படிப்பட்டவர்கள் மூன்று ஆண்டுகளாக மக்களை ஏமாற்றி விட்டார்கள் இன்னமும் மக்கள் மடையர்களாக மாட்டார்கள் உரிய நேரத்தில் உரிய தீர்ப்பு கொடுத்து இவர்களை அனுப்புவார்கள் கடந்த காலத்தில் இருந்த சில அதிகாரிகள் விட்ட தவறு மாவட்ட செயலாளராக இருந்தவரில் இருந்து ஏறத்தாழ குறிப்பிட்ட சில அதிகாரிகள் செய்த தவறுகள் காரணமாக சிலருக்கு வெற்றிகள் கிடைத்திருக்கின்றது இந்த வெற்றிகள் நியாயமாக செயல்படுகின்ற அதிகாரிகள் வருகின்றபோது இந்த மாயை பிம்பங்கள் எல்லாம் தகர்த்தெறியப்படும்.

**இந்த போத்தல் அரசியல் மற்றும் சாப்பாட்டு பார்சல் அரசியல் பண அரசியல் என்பதெல்லாம் மூழ்கடிக்கப்படக்கூடிய விதத்தில் எதிர்காலத்தில் நியாயமான தேர்தல் தீர்ப்புகள் நடைபெற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் எனவும் தெரிவித்தார்.**

